பக்கங்கள் 6

பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தனிப்பிரதி விலை சதம் 6.

# இலங்கை இந்தியன்

இலங்கை இந்தியரின் நலவுரிமைகளுக்காக் உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் வாரப்பத்திரிகை

புதன் கிழமை தோறும் வெளி வருவது

THE CEYLON INDIAN

A WEEKLY JOURNAL WHICH CHAMPIONS THE CAUSE OF INDIANS IN CEYLON

Pubished Every Wednesday

"என்று கடன் பணி செய்து கிடப்பதே'

"சாதி மதங்களைப் பாரோம்"

"நாமார்க்கும் குடியல்லோம்"

மலர் 1. | 1928-ம் வருஷம், டிசம்பர் மீ 12உ புதன்கிழமை. | இதழ் 27.

## குற்றமும் தண்டனையும்.

ருஷியஞானி டால்ஸ்டாய் எழுதியது.

மொனக்கோ என்னும் சிறிய நாடு ஒன்று பிரான்ஸ் இத்தாலியா நாடுகளின் எல்லைப் புறத்தில், மத்தியதரைக்கடலுக்கருகாமையில் இருந்தது. இது மிகமிகச்சிறிய நாடு. இந்நாட்டுறையும் மாக்களின் தொகை எழாயிரமேயாகும். என்றாலும் இதற்கு அரசன் ஒருவன் இருந்து வந்தான். நாட்டின் சுற்றளவும் ஜனத்தொகையும் சிறியதேயாயினும், பாராளும் பூவேந்தர்க்குரிய கோலும் கொடியும் நெடுமாடக்கோயிலும் தானையும் தானைத்தலைவனும் மந்திரியும் பிரதானியும் முதலாய வைபவங்களில் இச்சிறு நாடு காக்கும் சிற்றரசன் குறைந்தவன் அல்லன். மதம் காக்கும் பாதிரிமார்களும் அங்கு இருந்தனர்.

இந்நாட்டின் காப்பாய் அமைந்த சேனை பெரிய சேனையன்று. அறுபது வீரர்களையே கொண்டது அது. ஆயினும் அது சேனையேதான் அல்லவா? மற்ற பெரிய நாடுகளைப்போலவே, பிரஜைகள் இந்த வரியும் செலுத்தவேண்டும்.

சில ஆண்டுகளுக்குமுன் இச்சிறு நாட்டில் கொலையொன்று நடந்தது. இதுவே இந்நாட்டிற்கு முதற்கொலை. ஜனங்கள் இயற்கையிலே அமைதியுடையவர்கள் ஆதலால் அந்த அந்நாள்வரையில் கொலையொன்றும் நடந்ததேயில்லை. காவலர் கொலையாளியை கைதுசெய்து நீதிபதியின்முன் விசாரணைக்குக் கொண்டுவந்தனர். நியாயாதிபதியும், ஜூரிகளும் வக்கீல்மார்களும் சாக்ஷிகளும் ஒருமுகமாய்க் குற்றவாளியின் தலையை வாங்கிவிடுதலே நியாயம் என்று தீர்மானித்து, முடிவை மன்னனுக்கு அறிவித்தனர். அவனும் ஒம்மென்றுகூறித் தீர்ப்பை உறுதிசெய்தான்.

ஆனல் தீர்ப்பைநிறைவேற்றிவைக்கும் விஷயத்தில்சங்கடம் ஏற்பட்டது. தூக்கிவிடவேனும் தலைகொய்யவேனும் தேவையான எந்திரச் சாதனங்களை அந்நாடு பெற்றதில்லை. கூலிக்குக் கொலைசெய்யும் கொலையாளிகளும் அங்கு இல்லை, இந்நிலையில் என் செய்வது? செய்வினைநேரக் கூடினர் மந்திரக்கிழவர். கூடியவர், அருகிலுள்ள பிரஞ்சு அரசாங்கத்தாருக்கு எழுதித் தூக்குமரத்தையும் கொலையாளிகளையும் வரவழைத்துவிடுவதென முடிவுசெய்தனர்.

உடனே கொலைசெய்யும் எந்திரமும், அதற்குரிய ஆள்களும் அனுப்பமுடியுமாவென்றும், முடியுமெனில் அதற்கான செலவை அறிவிக்குமாறும் கேட்டனர். பிரஞ்சு அரசாங்கத்தாரிடமிருந்து எந்திரமும் ஆளும் அனுப்பிவைக்க முடியுமென்றும், அதற்குப் பதினாயிரம் பொன் செலவாகுமென்றும் பதில்கிடைத்தது.

அரசனுக்கு இச்செய்தியை மந்திரிகள் அறிவிக்க அவன் சிந்திக்கலாயினன். 'பதினாயிரம் பொன்னா! இந்தப் பயலுக்கா? இவன் புல்லிய தலையை வாங்குவதற்கு இத்தனை செலவா? பதினாயிரம் பொன் என்றால் ……சாமஸ்தானக் குடிகளில்ஆளுக்கு இரண்டு பொன் வீதம் ஆகிறது. சீ, இது சரியல்ல. குடிகளும் இச்செலவை ஏற்பதற்கு விரும்ப மாட்டார்கள். கேட்டாலும் கலகம் விளைத்தாலும் விளைப்பர். வேண்டா. ஆனல் குறைந்த செலவில் வேறுவழியில் இக்காரியம் முடியுமானல் நலமாயிருக்கும். யோசித்துப்பாருங்கள்' என்று கூறினான் அரசன்.

இதுகேட்ட மந்திரிமார்கள் மீண்டும் கூடினர். இத்தாலிதேசத்தின் ஞாபகம் வந்தது. 'பிரான்ஸோ குடியரசு நாடு. எனவே அந்நாட்டார் முடிகுடிய மன்னரைமதியார். இத்தாலி அரசனைக் கொண்டு காரியத்தை முடித்துவிடலாம். அரசனுக்கு அரசன் இச்சிறு உதவிசெய்ய மறுக்கமாட்டான். குறைந்த செலவில் காரியம்முடிந்துவிடும்' என்று கருதினர். அவ்வாறே இத்தாலிநாட்டு அரசாங்கத்திற்கு மன்னன் கடிதம் விடுத்தான்.

தலைவாங்கும் எந்திரமும் ஆளும்கொடுக்க முடியுமென்றும், அதற்குப்பன்னிராயிரம் பொன் செலவாகுமென்றும், இத்தாலியிலிருந்து பதில் வந்தது. இதுசிறிது சகாயந்தான். எனினும் மொனக்கோ நாட்டிற்கு இது பெருந்தொகையே. இத்தனைபொன்னை இவ்வொருபயல்தலைவாங்கவா செலவிடுவது என்றுமீண்டும் கருதினர். போர்வீரர்களில் ஒருவனைக்கொண்டு இக்காரியத்தைச் செய்துவிட்டால் என்ன. சுலபமாய்ப் பணச் செலவுமில்லாது முடிந்துவிடுமே என்று தோன்றிற்று. தானைத் தலைவனை அழைத்துக்கேட்டனர். அவனும் தனதுவீரர்களுடன் கலந்து பேசினான். 'போரில் பொருதற்குக்கற்றோமேயொழியக் கொலைத்தொழில் புரியக் கற்றதில்லை' என்று ஒரு முகமாய் அவர்கள் கூறி மறுத்துவிட்டனர்.

அரசாங்க அதிகாரிகளுக்குச் செய்வது என்னென்று விளங்காதுபோயிற்று. மந்திரிகளும் மற்றவர்களும் ஒன்றுசேர்ந்து இது விஷயமாய் முடிவொன்று செய்யஒரு 'கமிட்டியை' (Committee) நியமித்தனர். இக்கமிட்டியிற்குள் உட்கமிட்டியும் (Sub Committee ஏற்பட்டது. பலநாள் ஆலோசனை செய்து, ஆலோசனை கமிட்டியார் மரணதண்டனையை ஆயுள்பரியந்தமான காவல் தண்டனையாய் மாற்றிவிட்டால் கவலையும் பணச்செலவும் இல்லாதுபோய்விடும் என்று யோசனை கூறினர். மன்னனும் மகிழ்வுடன் ஏற்றான்.

ஆனல் என்! மற்றொருஇடையூறு இதனுள் புகுந்தது. ஆயுள்பரியந்தம் ஒருவனை அடைத்துவைப்பதற் கேற்ற காவற்கூடத்திற்கு என்செய்வது? அந்நாட்டில் ஒருநாள் அல்லது ஒருவாரத்திற்கு மேற்படாதகாலம் வரைச் சிறைவைக்க ஏற்றவிடந்தான் உண்டு. என்செய்வது? வெகுபிரயாசைப்பட்டு இடமொன்றுதேடிப்பிடித்தனர். அதில் குற்றவாளியை அடைத்து அவன் வெளியேறிப் போய்விடாது பார்த்துக்கொள்ள ஒருகாவற்காரனையும் நியமித்தனர். அரண்மனை தர்மசாலையிலிருந்து உணவு வாங்கிவந்து கொடுத்தும், அவன் ஓடிவிடாது காத்தும் வந்தான் காவற்காரன்.

மாதங்கள் சில சென்றன. வருடம் ஒன்றும் கழிந்தது. அரசன் ஒருநாள் அரசாங்க வரவுசெலவுக் கணக்கைப் பார்வையிடலாயினன். கணக்கில் புதியசெலவு இது இருக்கக்கண்டான். சிறைவைத்திருப்பவனது காவல், சாப்பாட்டிற்கென ஏற்பட்டசெலவு இவ்வளவென்னக் கண்ட அரசன் சிந்தித்தான். அந்தக் கீழ்மகனுக்குக் காவற்காரன் வேண்டியிருக்கிறது. தண்டச்சோறு போடவேண்டியிருக்கிறது. இதற்கென வருடத்திற்கு அறுநூறு பொன்னுக்கு மேலாகிறதே. அவனோ கிழவனல்லன். பால்யனாயிருக்கின்றான். உடல் உரத்தை நோக்குங்கால் இன்னும் ஐம்பது ஆண்டுகள் நிச்சயமாய் உயிரோடிருப்பான். கணக்குப்பார்த்தால் செலவு பெருகிவிடும், என மதித்த மன்னவன் தன்னவை அமைச்சரை அழைத்துவரப் பணித்தான்.

அரசன் ஆணையேற்று வந்தவர்களைப் பார்த்து, 'ஐயன்மீர், இந்தக் கைதி அரசாங்க வருமானத்தை விழுங்கிவிடுவான் போலிருக்கிறது. இச்சுமையை நாடு தாங்காது. இவன் பொருட்டு ஆகும் செலவைக்குறைக்க ஏற்பாடுசெய்தே தீரவேண்டும்!" என்று மன்னன் கூறலும் அவர்கள் தனியிடம் சென்று சிந்தித்தனர்.

"காவற்காரனை நீக்கி விட்டாலென்? செலவுகுறையும்" என்றான் ஒருவன். 'கைதி ஓடிவிடுவானே.' என்றான் மற்றொருவன். இம்மொழி கேட்ட முதன்மந்திரி 'ஓடிப்போனல் போகட்டுமே. நமது நாட்டைப் பிடித்தசனியன் தொலைந்தது, தொலையட்டும்' என்றுகூற எல்லோரும், 'அதுவேசரி' என்றனர். இதை அரசனுக் கறிவிக்க அவனும் அப்படியே ஆகட்டும் என்றான்.

காவற்காரனை நீக்கினர். கைதி வெளியேறவில்லை. சாப்பாட்டு வேளைக்கு உணவு வராமையால் வெளிவந்தான். வந்தவன் காவற்காரனைக் காணவில்லை. தானே தர்மசாலை சென்று உணவைவாங்கித் தின்றுவிட்டுத் தனது அறைக்குள்வந்து கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்துக்கொண்டான். மறுநாளும் அவ்வாறே செய்தான். இவ்வாறு பலநாள் கழிந்தது. வாரங்களும் சென்றன. ஓடுபவனாய்த் தெரியவில்லை.

மந்திரிமார்கள் நினைத்தவாறு குற்றவாளி ஓடிவிடாது கிடக்கவே திரும்பவும் எல்லோரும் சபைகூடினர். கூடியவர், அவன் ஓடிப்போக மாட்டான்போல் தோன்றுகின்றது. அவனிடம் நாம்போய் இனி அவன் இங்கு இருக்கவேண்டியதில்லை, என்று கூறிவிடுவதெனத் துணிந்தனர். உடனே நீதிபதி அவனை வரவழைத்து, "நீஏன் ஓடிவிடாதிருக்கின்றாய்? உனக்குத்தடையாய் காவற்காரனும் இல்லையே! நீ எங்கே வேண்டுமானாலும் போகலாம். அரசன்ஒன்றும் செய்யமாட்டான்" என்று கூறினர்.

குற்றவாளி, நீதிபதியை நோக்கிச்சொல்வான்; "ஐய, நான்ஓடிப்போனல் அரசன் எதுவும் செய்யமாட்டான் என்பதை அறிவேன். ஆனல் எனக்குப் போகத்தான் இடமில்லை. நான் ஓடி என்ன செய்கிறது? நீங்கள் எனக்குத் தண்டனைவிதித்து என்னைக் கெடுத்துவிட்டீர்கள். தண்டனை அடைந்தவன் என்று எல்லோரும் என்னை ஒதுக்குவர். ஜனங்கள் என்னை மதிக்கமாட்டார்கள் வேலைசெய்து பிழைக்கலாமோ என்றால் அதுவும் இனி முடியாது. சிறையிலிருந்ததால் வேலைசெய்யும் பழக்கத்தையும் இழந்துவிட்டேன். நீங்கள்என்பால் வழங்கியது நீதியல்ல. அநீதியே. ஆதியில்நீங்கள்எனக்கு விதித்தது மரணதண்டனை. அதை நீங்கள் நிறைவேற்றி யிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதது அநீதிஅல்லவா? இருப்பினும் அதற்காக நான்குறைகூற முன்வரவில்லை. பின்னர் ஆயுள்தண்டனை விதித்து எனக்குச் சாப்பாடு முதலானவசதிசெய்து கொடுக்க ஒரு ஆளை நியமித்தீர்கள். அவனையும் பிறகு நீக்கிவிட்டீர்கள். நானே போய்ச் சாப்பாடு தேடிக்கொள்ள வேண்டியதாயிற்று. அதற்காகவும் உங்கள் மீது குறைகூறவில்லை. ஆனல் இதுபோது வெளியேறிவிடுஎன்று சொல்லுகிறீர்களே, இது நீதியாமோ? இதைநான் ஏற்கமுடியாது. நீங்கள்செய்வதைச்செய்யுங்கள். நான் இவ்விடம்விட்டு எங்கும் போகமாட்டேன். சரதம்.

இவ்வார்த்தையைக்கேட்டு வியப்படைந்த நீதிபதியும், மற்ற மந்திரிகளும் இனிச் செய்வது யாதெனத் தெரியாது விழித்தனர். மீண்டும்கூடி யோசித்தார்கள். கைதியோ வெளியேறமாட்டேன் என்று கூறுகின்றான். அவனை எப்படியாவது வெளியேற்றிவிட வேண்டும். கடைசியாகப் 'பென்ஷன்' கொடுத்து அவனை இந்நாட்டினின்று அனுப்பிவிடுவதெனத் தீர்மானித்தனர். அரசனுக்கு விஷயத்தைக் கூறக் கடைசியில் குற்றவாளிக்கு வருஷம் ஒன்றுக்கு அறுநூறு பொன் பென்ஷனுகக் கொடுத்துவிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. இம்முடிவை குற்றவாளிக்கு அறிவித்தார்கள்.

இதைக்கேட்ட குற்றவாளி, 'ஐயா,நல்லது. நீங்கள் சரிவர இத்தொகை கொடுத்துவிருவீரானல் எனக்கு வெளியே செல்ல ஆக்ஷேபனை எதுவும் இல்லை, தவறினல் வந்து விடுவேன். அந்த நிபந்தனையின் பேரில் நான் போகச்சம்மதம்' என்று மொழிந்தான்.

மொனக்கோ நாட்டார் மூன்றிலொரு பங்கு பென்ஷன் தொகையை முன்பணமாகக் கொடுத்துவிட்டனர். அவனும் அதையேற்று நாட்டைவிட்டுப் புறப்பட்டு

(3- பக்கம் பார்க்க)

# ஜனசமூகமும் ஆரோக்கியமும்

—(O)—

## டீர். ஜியார்ஜ் நியூமனின் உபதேசம்

[ஜனசமூகத்தின் ஆரோக்கியத்தைக்கவனித்து வளர்த்துவரவேண்டியது ஒவ்வொரு அரசாங்கத்தினுடைய கடமையாகும். நோயுற்ற மக்களால் தேசத்திற்கு நஷ்டமேற்படுவதோடு அவர்களுக்குச் சிகிச்சை முதலியவை செய்வதற்கு நல்ல ஆரோக்கியமுள்ள பலருடைய காலமும் செலவழிக்கப்படுகிறது. இதனல்நோய் வருமுன்பே தக்கபாதுகாப்புச் செய்யவேண்டுவதன் அவசியத்தைப்பற்றித் திரு. நியூமன் சொல்லியுள்ளபடி ஒவ்வொரு துரைத்தனமும் உணர்ந்து நடக்கவேண்டும். நோயுற்றவர்களால் வீணுக்கப்படும் காலத்தை ஆங்கிலநாட்டில் அளவிட்டிருப்பதுபோல ஒவ்வொருநாடும் அளவிட்டுப்பார்த்தாலொழிய ஏற்படும் கஷ்டத்தை அறிந்துகொள்ளஇயலாது. நோயை முன் கூட்டியே வாராமல் தடுப்பது மிகுந்த பணச்செலவைக் குறைப்பதாகும். ப. ர்.]

ஒருசமூகத்தைப் பாதுகாத்து வளர்ப்பது எங்ஙனம்? ஆரோக்கியமுள்ள ஆடவரும் பெண்டிரும் தங்கள் உடல் நலத்தைக் காத்துக்கொண்டு, அதிகஅழகுபெற்று, அறிவுபெருகி சக்திபெறுவது எங்ஙனம்? குழந்தைகள்பிற்காலத்தில்தேகக்கட்டுவாய்ந்து கட்டிளஞ் செல்வராக வாழ்வதற்கு என்ன செய்யவேண்டும்? நோயுற்றுத் தளர்ந்தவர்களை விரைவில் குணப்படுத்தி மறுபடி அவர்கள்தொழிலுக்குத்தகுதி அடையச்செய்வது எங்ஙனம்? நல்வாழ்விற்கு எதிரான இன்னல்களைத்துடைத்து மக்கள் சஞ்சலமில்லாது வாழ்வதெங்ஙனம்?

இத்தகைய வினக்களுக்கு ஒவ்வொரு அரசாங்கமும் ஸ்தலஸ்தாபனமும் விடையிறுக்கவேண்டியது அவசியம். இவற்றின் விடைகளை ஆராய்ந்தறிந்த துரைத்தனமே மிகுந்த மேம்பாடடைந்து மக்களுக்கு அதிகப்பயன் விளைப்பதாகும். இதுபொதுநல ஆரோக்ய ஸ்தாபனங்கள் அமைப்பதிலும் சுகாதாரமுறையை ஏற்படுத்துவதிலும் முற்றுப்பெற்றுவிடாது. இது அரசியலின் ஒவ்வொரு பாகத்திலும் சம்மந்தப்பட்டது. காலத்திற்கேற்ப பெருகிவரும் ரசாயனஆராய்ச்சி அறிவும் அன்புமே இதற்குப் போதிய பரிகாரம் தேடக்கூடும்.

ரசாயனஅறிவுமட்டுமோ,அன்றி அன்புமட்டுமோ தனியாக எதையும் சாதித்துவிட முடியாது. இவைஇரண்டறக் கலந்தாலன்றி நலன் ஏற்படாது. இக்காரியம் மோட்டார் வண்டிதயாரிப்பது போன்றதைத் தொழிலன்று. இது ஒரேசட்டத்தை மூலாதாரமாகக்கொண்டு நடைபெற இயலாது. இக்காரியம் மக்கள் வளர்ச்சியைப் பொறுத்துத் தானும் வளர்ச்சி பெறுகிறது; அவர்கள் உடல்நிலைமாறும்பொழுது இதுவும் மாறுபாடடைகிறது. மனிதனுடைய தேகசக்தியும் மனோபலமும் சேர்ந்தே இதை முடிக்கவேண்டியிருக்கிறது.

### அடிப்படை.

ஆரோக்ய கட்டிடம் அமைப்பதற்கு அடிப்படையாகவுள்ளது மனிதஇயற்கை. இது பண்டைக்காலமுதல் மறக்கப்பட்டு வருகிறது. நோய்வராமல் முன்கூட்டியே பாதுகாப்பதென்பது எளிதான வேலையன்று. அதைச்சித்திபெற முடிப்பதற்குப் பலவிதத்திலும் அரும்பாடுபடவேண்டியிருக்கிறது.குழந்தைகளைப் பெற்றெடுக்கும் அன்னையர் உடல் நலம் முதற்கண் பேணப்பட வேண்டும். குழவிகள்நன்ருய்ப் பாதுகாக்கப்பட்டுப் போஷிக்கப்படவேண்டும். தக்கவயது வந்தவர்களும், வயோதிகர்களும் அகாலமரணமடையாமல் நீடித்த வாழ்வுபெறச் செய்ய வேண்டும். இவற்றிற்கு ஆங்காங்கே வைத்திய வசதிகள் மட்டும்செய்தால்போதாது. மனிதன் மனமும் உடலும் ஒருங்கே வளர்ச்சிபெற்று அவற்றால் கூடியவளவு வினையாற்றற்குரிய சக்திபெறவேண்டும். ஆகவே மக்கட் சமுதாயத்தின் ஆரோக்யம் வைத்தியருடைய போதனையையும், வைத்தியசாலையையும் பொறுத்திருக்கவில்லை.; ஆனல் சமூகத்தின் ஐக்கியப்பட்ட முழுவளர்ச்சியையேபொறுத்திருக்கின்றது.

நாம் அடைய வேண்டுமென்று விரும்பும் இக்காரியங்களைப்பற்றிப் பேசிவிட்டால் போதாது, அன்றி காலக்கிரமத்தில் தாமாக நிறைவு பெறுமென்றுநம்பி வாளாவிருப்பதும் பயன் தராது. இவை பலதலைமுறைகளில் சிறிதுசிறிதாக முடியவேண்டியவை. தீர்க்கதரிசனம், ஒழுங்கான கட்டுப்பாடு, பொருட்செலவு இவை அதிகமாய்வேண்டும். முதலில் ஆரோக்யத்தை முன் கூட்டியே பாதுகாத்து வருவதற்கு நான்குகாரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன.

### கணக்குப் புள்ளிவிவரங்கள்.

புள்ளிவிவரங்களைக் கணக்கெடுப்பதைப்பற்றிச் சிலர் குறை கூறுகின்றனர். புள்ளிவிவரங்கள் உபயோகிக்கப்படும்முறையினல்தான் நன்மையோ தீமையோ ஏற்படும். புள்ளிவிவரங்கள் உண்மையாயுள்ள விஷயங்களை எண்களின் மூலமாய்க்குறிப்பிடுவதாகும். நமக்கு அவை இன்றியமையாதவை. ஜனசங்கை, பிறப்புவிகிதம், மரணவிகிதம்,நோயற்றவர் தொகைமுதலியவற்றிற்கு அவசியம் கணக்கு எடுக்கப்பட வேண்டும். அக்கணக்கு சரிபார்க்கப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும், இங்கிலாந்தில் இவற்றிற்கெல்லாம் போதியசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### குறிக்கோள்.

இரண்டாவதாக, நமக்கொருகுறிக்கோள்வேண்டும். அது நோயும் நொடியுமாயிருத்தல் முடியாது, ஆனல் ஆரோக்யமும் நல்லுடற் கூறுமாயிருத்தல் வேண்டும். ஆரோக்யத்துக்கு ஒரு எல்லை குறிப்பிட முடியாது. ஆனல் உடற்கூற்றை நன்ருய்அறிந்துகொண்டு சராசரியாகப் பார்த்து உண்மையான ஆரோக்யத்தைப்பற்றி ஒரு நிர்ணயம் செய்துகொள்ளமுடியும். நாளுக்குநாள் வளர்ந்துவரும் நமது உடற்கூற்றுசாஸ்திர அறிவைக்கொண்டு உடலின் உயரம் கனம், சீதோஷ்ணம், நாடித்துடிப்பு, இரத்தஓட்டம், சுவாசம் சுவாசப்பைகளின் அளவு, தசைகளின் சக்தி, நரம்புகளின் குணம், அறிவுத்திறன்முதலியவற்றைப்பரிசிலனை செய்துமக்கள் உடல் இவ்வாறு தானிருக்கவேண்டுமென்று நாம் தீர்மானஞ் செய்து கொள்ளவேண்டும். அத்தீர்மானத்தையே குறிக்கோளாகக் கொண்டு ஒவ்வொரு தனிநபரையும் பக்குவப்படுத்தி அந்நிலைக்குக் கொண்டுவர முயலவேண்டும். தெரிந்ததை வைத்துக்கொண்டு தெரியாததைக் கண்டுபிடித்தும், தோல்வி தடைகள் முதலியவற்றைப் பொருட்படுத்தாது, ஒவ்வொருவிஷயத்திலும் பரீட்சைகள் செய்துபார்த்து உடலைப்பற்றிய நமது அறிவை விசாலப்படுத்திக் கொண்டே போகவேண்டும்.

### ஆரோக்ய ஸ்தாபனத்தின் வேலை.

மூன்ருவதாக, உடற்கூற்றைப்பற்றி அறிந்துகொள்ளுவதோடு நாம் நோயின்காரணத்தையும், நோயின் தன்மையையும், அதை நிவர்த்திக்கும் முறைகளையும், அதுபரவும் வகையையும் ஆராய்ச்சிசெய்து அறிந்துகொண்டே வரவேண்டும். இவ்விஷயத்தில் ஆண்டுதோறும் நாம்முன்னேறிவருவதோடு புத்தறிவு படைத்து வருகிருேம். நோயைத் தடுத்தொழிப்பதற்குத் தக்கமுறைகளைக்கையாளுவதில் நமக்கு எவ்விதஇடையூறுமில்லாமல் வேண்டிய சௌகரியம்செய்து கொடுக்கவேண்டியது அரசாங்கத்தின் ஆரோக்ய இலாகாவின் கடமையாகும். இம்முறைகள் பலதிறப்பட்டவை. சிலபொது சுகாதாரத்தைச் சார்ந்தவை; சிலவெகு காலத்திற்கு முன்னரே வியாதியின் குறியைக்கண்டுபிடித்துத் தடைக்க வேண்டியவை, சில நோய்க்குத் தேகம்இடம் கொடாமல் எதிர்த்து நிற்கச்செய்ய வேண்டிய முறைகள், வேறுசில வைத்திய சிகிச்சைக்கு வேண்டிய இடமும் வசதியும் அமைக்க வேண்டியவழிகள். நோயுற்ற ஜனங்களைத்தனியேபிரித்துவைப்பதும் எச்சரிக்கை செய்வதும், தொத்துநோயைத் தடுப்பதும் வெகுகாலமாகக் கையாளப்பட்டுவரும் முறைகள். இப்பொழுது இவற்றிலிருந்து பல புதியகிளைகள் தழைத்திருக்கின்றன. அதனல் பலபுதிய முறைகளும் கையாளப்பட வேண்டியிருக்கின்றன.

### தேசிய ஆரோக்ய அமைப்பு.

கடைசியாக, பெருகி வளர்ந்துவரும் ரசாயன அறிவினலும், மருந்துகளினலும் சமூகத்தின் ஆரோக்யமும் நல்வாழ்வும் பெரிதும் பயனடைந்து வருகின்றன. இதற்குச்சிறிய ஸ்தாபனங்கள் மட்டும் பயன்படா; ஒரு பெரிய தேசிய அமைப்பு— நாடனைத்திற்கும் பொதுவானஸ்தாபனம் ஏற்பட்டு நடக்கவேண்டும். 14—நூற்ருண்டிலிருந்து அரசாங்கம் சமூக ஆரோக்யவிஷயத்தில் தலையிட்டு வேலைசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதலில அவசியமாயிருந்தது இப்பொழுது காரிக அரசாங்கத்திற்கு முழுதும் பொறுப்பாயும் கடமையாயுமிருக்கிறது. மருந்து விஷயமான கொள்கையை நடைமுறையில் கொணர்ந்து ஜனங்களை வற்புறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்யமுடியாது. அதன்பெருக்கம் ஜனங்கள் சம்மதத்தைப் பொறுத்திருக்கிறது, அதன் பயன் செலவழிக்கப்படும் பொதுஜனப் பணத்தைப்பொறுத்திருக்கிறது. ஆகவே பொதுஜன ஆரோக்யம் கிரியாம்சையில் நமக்கு ஏற்படும் அனுபவத்தினலும், மக்கள் சம்மதத்தினலும், உதவியினலும், கிடைக்கக்கூடியபொருள் மிகுதியாலும், அரசாங்கச் சட்டங்களாலுமே வளர்ந்துவரக்கூடுமென்று கூறுகிருேம்.

### சில புள்ளிவிவரங்கள்.

1927—ல் கிரேட்பிரித்தனின் ஜனசங்கை 48,393,000.இதில் 18,804,000 பேர் ஆடவர், 20,486,000 பேர் பெண்டிர். இவர்களில் அவ்வாண்டில் நோயுற்றவர்கள் படுக்கையில் கழித்தவாரங்களை (ஆடவர்) 9,200,000, பெண்டிர்—6,500,000. இதனல் நோயுற்றவர்கள் (இன்ஷியூர் செய்யப்பட்டிருந்தவர்மட்டும்) வேலைசெய்ய முடியாது கழிந்தவாரங்கள் 30,500,000(அல்லது 58, 540, வருஷங்கள்) அதாவது 590 000 மக்கள் ஒவ்வொருவரும் 15-மாதம் வேலையில்லாது கழித்ததற்கு ஈடாகிறது. நோயுற்றவர்கள் வீணக்கிய காலம்மட்டும்நஷ்டமாயில்லாது, அவர்களுக்குச் சிகிச்சைசெய்து உதவிவந்த எத்தனையோ பேருடையகாலமும் கழிந்திருக்கிறது.

# நேருயாதாஸ்த்தைப் பரப்புவது.

## லாலாஜிக்குச்சிறந்த ஞாபகச்சின்னம்.

மகாத்மா காந்தி 'நல்ல ஆரம்பம்' என்ற தலைப்பின்கீழ் இவ்வார 'யௌவன இந்தியா'வில் ஓர் கட்டுரை எழுதியுள்ளார். லாலாஜியின்ஞாபகார்த்தநிதிக்குதிரு. பர்லா ரூபாய் 15,000 அளித்ததிலிருந்து நல்ல ஆரம்பம் செய்யப்பட்டிருப்பதாய்க் குறிப்பிட்டுவிட்டு அடிகள் பின்னும் கூறுவதாவது:—

பாஞ்சாலச் சிங்கத்தின்கர்ச்சனையை நாம்இனிகேட்க முடியாது. ஞாபகச்சின்னத்திற்கு விரைவில் பொருள்சேர்வதிலிருந்து ஜனங்களுக்கு அவர் ஞாபகத்தில் உள்ள அன்பு தெரிந்துவிடும். தேசியத்தலைவர்கள் குறிப்பிட்டிருக்கும் தொகையைப்போல் இரண்டு பந்து வசூல்செய்யினும் தற்காலத்திற்குப் போதாமலிருக்கும்.


### பூர்ணசுயேச்சை

லாலாஜி மிருகத்தனமாக அடிக்கப்பட்டபொழுது வெட்டித்தள்ளப்பட்ட நமது தேசியமானத்தைப் புனருத்தாரணம்செய்ய வேண்டுவதற்கு நாம்விரைவில் சுயராஜ்யத்தைப்பெறுவதற்கு வழி கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் நாளுக்குநாள் அதிகப்பட்டுவருகிறது. அவ்வாறு செய்வதில் மிக எளிதாய் முடிக்ககூடியது லாலாஜி செய்துவந்த வேலையை முற்றுவிக்கச்செய்வதே. நேருயாதாஸ்த்தைப் பரப்பும் வேலையை அவர்மேற் கொண்டிருந்தார். இத்தகைய காரியத்தில் முயற்ம்செய்வது எளிதும் பயன்தரத்தக்கதுமாகும். நமது தேசிய முன்னேற்றத்தில் அந்த யாதாஸ்துக்கு வேண்டியஏகோபித்தஆதரவைப் பெறவேண்டியதும் ஒருபடியாய் அமைந்திருக்கிறது. இதனல் மட்டுமே குடியேற்றநாட்டு அந்தஸ்துக்கூட ஏற்பட்டுவிடாது. நமது தற்கால வேலைக்கு குடியேற்றநாட்டந்தஸ்த்தையும், பூரணசுயேச்சையையும் பற்றி ஏற்றத்தாழ்வுகளைக் குறித்து விவாதிப்பது அனுவசியமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். குடியேற்ற நாட்டந்தஸ்த்து கிடைக்குமாயின் நாம் செல்லவேண்டிய வழியில் அதிகதூரம்செல்வதாக நம்மிற்பலரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனல் பூரணசுயேச்சைவாதிகள்குடியேற்றநாட்டமைப்பே நமக்குஎன்றும் அளிக்கப்பட மாட்டாதென்பது நிச்சயமாயிருக்கும்பொழுது அதற்காகப் பாடுபடுவதவீணுகுமென்றும், நேரே பூர்ணசுயேசசைக்கே உழைக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். குடியேற்ற நாட்டமைப்பு நிச்சயமாய்க் கிடைக்காதென்பதும், எலோரும் பூர்ணசுயேச்சைக் கொள்கையை ஏகோபித்து ஒப்புக் கொள்ளுவரென்பதும் உறுதிப்படின் இத்தகைய வாதத்திற்கு மதிப்புண்டு. இப்போதைய நிலையில் பூர்ணசுயேச்சை நிச்சயமாய்க் கிடைக்குமென்றுபாடுபடுவதற்குவழியிருந்தால் நேரு யாதாஸ்த்துப ஏகோபித்து ஒப்புக்கொள்ளவும்பட்டால் நாம் பூரணசுயேச்சையைவிட குடியேற்ற நாட்டமைப்பை எளிதில் பெறுதல்கூடும். ஆதலால் நான் வேண்டுவதெல்லாம் சுயேச்சைக்குப் பாடுபடுபவர்களும் தங்கள் பிரசாரத்தைநிறுத்தாமல், குடியேற்ற நாட்டமைப்பும் வழியில் ஒருபடியென்றுவது கருதி ஒப்புக்கொண்டு அதற்குப் பூர்ண ஆதரவளிக்க வேண்டுமென்றே குடியேற்ற நாட்டமைப்பு தென்னுபிரிகாவிலும், கனடாவிலுமுள்ளவதைப்போலிருக்குமாயின் அதற்கும் பூர்ணசுயேச்சைக்கும் எவ்விதமுரண்பாடு மில்லையென்று நான் கூறுகிறேன்.

லாலாஜியின் ஞாபகார்த்தமாகவும், நமது அறிவு வற்புறுத்துவதற்காகவும் நாம்நேரு யாதாஸ்த்தை உடனே பரப்ப முயலவேண்டும். ஏனெனில் அந்தயாதாஸ்து முடிவானதும் நித்தியமானதுமாயில்லை. அது பற்பல கட்சிகளும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து முடிவாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு முடிவாகும். இப்பொழுதேஅதுவிஷயமாக ப்பொதுஜன ஆதரவைப்பெருவிடில் அதைத தயாரிப்பதில் கழிக்கப்பட்ட அரும்பெரும் முயற்சிகளெல்லாம் வீணய்ப் போக்கப்பட்டதாகும். அப்பெரும் யாதாஸ்த்தும் காலத்திற் கேற்றபடியில்லாது பழமையடைந்து வீணகும். அதன் பெருமையெல்லாம் இப்பொழுது உடனே எல்லாப்பெரும் தேசிய ஸ்தாபனங்களும் ஒப்புக்கொண்டு ஆதரிப்பதையேபொறுத்திருக்கின்றது.


## "ஆர்கையில்"

துவிசக்கிர (ஸைக்கிள்) வண்டிகள்



இலங்கையில் மிக குறைந்த விலைரூபாய் 85-00

சிறு தொகை பணம் கட்டி சைக்கிள்கள் வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம்.

**HOARE**

& CO (ENGINEERS) LTD

தபால் பெட்டி நெ. 22

கொழும்பு.

ஆர்டர் கொடுப்பவர்கள் இப்பத்திரிகையை குறிக்கவும்.


மாமியார்:--- நல்ல மல்கோவாப்பழம் ஒன்று கிடைத்தால் பாதி உயிரையும் கொடுப்பேன்.

o o o

நாட்டுப்பெண்:--- அப்படியானல் உங்கள் பிள்ளை வந்தவுடன் இரண்டுபழம் வாங்கித் தருகிறேன் (முழு உயிரும் போவதற்கு.)

o o o

## "ஹோமொஜென்"

ஹோமொஜென் உயர்ந்த ஆஸ்டிரேலியன் பசுக்களின் பாலிலிருந்து புத்தப்புதிய ரசாயனமுறைகளில், மனிதர் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.
ஹோமொஜெனில் குழந்தையைப் புஷ்டியுடன் வளர்ப்பதற்கு வேண்டிய சகல பொருள்களும் போதிய அளவு சேர்ந்திருக்கின்றன.
ஹோமொஜென் பரிசுத்தமானது, எளிதில் ஜீரணமாகக்கூடியது, வயிற்றுக்கு இதமானது. மாதிரிக்கு எழுதவும்.




SOLE AGENTS FOR CEYLON:—
The Central Medical Stores
Main Street, COLOMBO.




## ஜார்ஜ் ட்ராலியின் லயன் சென்ட்

நெடுநேரம் நீடித்திருக்கக்கூடிய
சுகந்த பரிமள வாசனையுடையது.
மனதிற்கு சதா ரம்யத்தைக் கொடுக்கக்
கூடியது.
எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. Adycappa Chetty
COLOMBO.
(C.I. 3.)

## நீலநிறமும், தங்கநிறமும்

தாய்மார்களே! உங்கள் குழந்தைகளுக்கு இயற்கைப் பாலுக்கு பதிலாக ஏதாவது உணவுப்பொருள் வாங்க நேரிட்டால் நீலநிறமும்,தங்கநிறமும் டின்களில்வைத்துவரும் "லக்டோஜனே" வாங்குங்கள்.

உண்மைக்கும் பிரயோஜனத்திற்கும் இந்நிறங்கள் எவ்விதம்மேலான சின்னங்களாக இருக்கின்றனவோ அதுபோலவே குழந்தைகளுக்கான உணவுப்பொருட்களுக்குள் சுத்தத்திற்கும் சிறந்தகுணத்திற்கும் ஓர்முத்திரையாக விளங்குகிறது.

பரீட்சார்த்தம்செய்து பாராதீர்கள். உங்கள் குழந்தைகளுக்கு ஆகாரங்களில் மிகவும் நல்லவைகளையே கொடுக்கவேண்டும். நீலம் தங்க நிறங்களிலுள்ள டின்களிலிருக்கும் "லக்டோஜன்" உணவையே உங்கள் குழந்தைகளுக்கு ஊட்டுவீர்களாக.

"லக்டோஜன்" குழந்தைகளுக்கும்பலமற்றவர்களுக்கும் தக்க பாலாகாரமாகும். இவ்வருமை ஆகாரத்தின் ஸெம்பல்களும் இதைப்பற்றின முழு விவரங்களும் எங்களிடமெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்:—




நெஸல்ஸ் (C.I.)
தபால் பெட்டி 189,
கொழும்பு.


## 'டோனமூர்' சீர்திருத்தமும் சட்டசபையும்.

[டோனமூர் சீர்திருத்தங்களைப்பற்றி நமது சட்டசபையில்பலநாள் நீண்ட விவாதங்கள் நடந்திருப்பதால் நிறைவேறிய தீர்மானங்களை மட்டும் வாசகர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும்பொருட்டுக் கீழே தொகுத்து வெளியிடுகிறோம். குடியேற்றநாட்டு மந்திரிக்கு இத்தீர்மானங்கள் அனுப்பப்படும். அவர் மேன்மைதங்கிய கவர்னருடைய அறிக்கையையும் ஒத்திட்டுப் பார்த்து இலங்கையருடைய அபிப்பிராயங்களைத்தெரிந்து தீர்மானம்செய்வார்.]

### கமிட்டிகள்மூலம் அரசாங்க நடைமுறை.

மத்திய சட்டசபையிலிருந்து நிர்வாக சபைகளை நியமித்து அரசாங்கத்தை நடத்துவதென்று டோனமூர் கமிஷன் பிரேரேபித்திருப்பது இக்காட்டு நிலைமைக்கு ஒவ்வாததாயிருப்பதுடன் ஜனங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயுமில்லையென்று இச சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆசரித்தவர் 23, எதிர்த்தவர் 8, நடுநிலை 5.

நிர்வாக சபைகளின் மூலமாய்நடத்தப்படுவதற்கு சட்டநிர்மாண சபையையும், அரசாங்கநிர்வாக சபையையும் அமைக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கும் யோசனை நிறைவேறத் தக்கதில்லையென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது,

ஆசரித்தவர் 15, எதித்தவர்14, நடுநிலை10.

ஒவ்வொரு கமிட்டிக்கும் மந்திரிக்கும் அளிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கும் கடமைகளும்,பொறுப்புக்களுமசட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று இச்சபை சிபார்சு செய்கிறது.

ஆசரித்தவர் 21, எதிர்த்தவர் 9, நடுநிலை10.

குடியேறற நாட்டந்தஸ்துள்ள சுய ஆட்சிக்கு இலங்கை தகுதிபெற்றிருக்கிறதென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆசரித்தவர்16, எதிர்த்தவர் 11, நடுநிலை13.

### கவர்னருடைய அதிகாரங்கள்.

கவர்னருக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் பொறுப்பாட்சியின்ஒருபகுதியளிப்பதற்கான திட்டத்தில் முரண்பாடுடையவையாயும் மிக அதிகமாயிருப்பதாயும் இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆசரித்தவர் 21, எதிர்த்தவர் 4, நடுநிலை12.

ஜாதிகள், மதங்கள் ஒன்றுக்கொன்று விரோதமான வேற்றுமை ஏற்படாமல் தடுப்பதற்குவேண்டியதைத்தவிர, கவர்னர் சட்டமியற்றுவதற்குத் தன் சம்மதம்கொடாமல் தடுக்கக்கூடியமுறையில் ராஜஆணைகளிலுள்ள விஷயங்களுடன் புதிதாய்ச் சேர்க்க வேண்டுமென்று கூறப்பட்டிருப்பது தேவையில்லாததும், பிற்போக்கானதுமாயிருப்பதாகவும், அதை அனுஷ்டிக்கக்கூடாதென்றும் இசசபை கூறுகிறது.

ஆசரித்தவர் 21, எதிர்த்தவர் 4, நடுநிலை12.

இன்னும் சட்டமியற்றும் முழுஅதிகாரமும் கவர்னருக்கே உரியதென்றும், எந்தவிஷயத்திலும் ஓட் வேண்டியதில்லையென்றும் கூறப்பட்டிருக்கும் ஏற்பாடு அனுஷ்டிக்கப்படக்கூடாதென்றும் இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆசரித்தவர் 21, எதிர்த்தவர் 4,நடுநிலை 12

எந்தச்சட்ட மியற்றுவதற்கும் முன்னர்கவர்னருடைய அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்று கூறப்பட்டிருக்கும் நிபந்தனைப்பிரிவு தத்துவ பூர்வமாக ஆட்சேபனைக்கிடமாயிருப்பதோடு, சட்டசபையின்அதிகாரத்தையும் குறைப்பதாயிருக்கிறதென்பது இச்சபையின் அபிப்பிராயம்.

ஆசரித்தவா 20, எதிர்த்தவர்3,நடுநிலை13.

சுய ஆட்சிபெற்றகுடியேற்ற நாடுகளில் மந்திரிகள்வசம் விடப்பட்டிருக்கும் இலாகாக்கள்சம்பந்தமாகஎந்த ஸ்தானம்அளிக்கப்பட்டிருக்கிறதோ அதுபோன்றஒரு ஸ்தானத்தை அரசியல் ஆட்சியிலும் நிர்வாகத்திலும் கவர்னர் வகிக்கவேண்டுமென்றஇச்சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆசரித்தவர் 10, எதிர்த்தவர்8, நடுநிலை 19.

### வாக்குரிமை.

பெண்கள் விஷயத்தில் வாக்குரிமைக்கு நிபந்தனைவயது 21— ஆகஇருக்கவேண்டும், 30 அல்ல.

ஆசரித்தவர்28, எதிர்த்தவர்3, நடுநிலை12.

ஒவ்வொருவரும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் மூன்று பாஷைகளில் ஒன்றில்எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

ஆசரித்தவர் 17, எதிர்த்தவர்14,நடுநிலை12,

முன்னரே நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தங்களோடு வாக்குரிமை வழங்கும்விஷயத்தில் டோனமூர் கமிஷன்செய்திருக்கும் சிபார்சுகளை இச்சபை ஒப்புக்கொள்ளுகின்றது. (ஏகோபித்து நிறைவேறப்பட்டது.)

வரப்போகும் சட்டசபையில்அங்கத்தினர் தொகை50—க்கு மேற்பட்டிருக்க வேண்டாமென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆசரித்தவர்11,எதிர்த்தவர் 10,நடுநிலை 15.

### மந்திரிகள்.

மந்திரிகள் நியமனத்திற்காகத் தீர்வை அதிகப்படுத்தப் ப்டாமலிருக்கவேண்டும். எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மந்திரிகள், ஸ்பீகர் இவர்களுடைய சம்பளம் வருஷத்திற்கு ரூபாய் 27 000 த்திலிருந்து வருஷத்திற்குரூ 18, 000என்று குறைக்கப்படவேண்டும்.

ஆசரித்தவர் 17, எதிர்த்தவர்4,நடுநிலை 15.

தனித்த குறிப்பிட்ட தொகுதிகளின் அங்கத்தினர்கள் 23 லிருந்து 65 பேரென்று அதிகப்படுத்த வேண்டுமென்று கூறப்பட்டிருப்பது மிக அதிகமாயிருக்கிறது.

ஆதரித்தவர் 10, எதிர்த்தவர்9, நடுநிலை 17.

புதிய அரசியல் திட்டத்திற்காக கவுன்ஸில் சட்டம் அமைக்கும்பொழுது அதில் அரசர்பெருமான்,இந்தத்தீவுக்குப் பூரணப் பொறுப்பாட்சி அளிக்கப்படுவதற்கு ஒருகாலவரை குறிப்பிட்டு ஒருபிரிவும் அமைக்க வேண்டுமென்று குடியேற்ற நாட்டுமந்திரி ஆலோசனை கூறவேண்டுமென்று இச்சபை வேண்டிக் கொள்ளுகிறது.

ஆசரித்தவர்14,எதிர்த்தவர்11. நடுநிலை 10.

### பொது உத்தியோகஸ்தர்கள்.

(1) புதிய கவுன்ஸில் சட்டத்தில்பொது உத்தியோகஸ்தருடைய சம்பளம், படித்தங்கள், உதவிச்சம்பளம், உத்தியோக உயர்வு, வேலை நியமங்கள் முதலியவற்றில் குடியேற்றநாட்டு மந்திரியே முடிவான தீர்மானம் கூறவேண்டியவர் என்றுஒருபிரிவை அமைப்பதற்குக் கூறப்பட்டிருக்கும் யோசனையை இச்சபை நிராகரிக்கிறது.

(2) பொது உத்தியோக இலாகாக்களைப் பற்றிவிசாரிக்க இனியேற்படப்போகும் கமிஷனுக்கு விசேஷகமிஷன் அவசியமென்று குறிப்பிட்டிருப்பதற்கு அதிகமான அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறதென்று இச்சபை கூறுகிறது.

(3) ஒவ்வொரு இலாகாவின் ஒழுங்குமுறையும் அதிகாரமும் அந்தந்த இலாகாவின் மந்திரிவசம் இருக்கவேண்டும்.

(4) புதிய அரசியல் அமைப்பின்படி பொது உத்தியோகஸ்த்தர்கள் வேலையின்மைக்கு நஷ்ட ஈடும், சம்பளத்திற்கேற்ற

(4—ம் பக்கம்பார்க்க)

---

(1—ம் பக்கத்தொடர்ச்சி)

அக்காட்டுக் கருகிலுள்ள எல்லைப்புறப் பிரதேசத்தில் குடியேறினன். பெற்ற பென்ஷனைக்கொண்டு சில ஏக்கர் நிலம் வாங்கித் தோட்டம் போட்டுக் காய்கறிகளைச் சந்தையில் கொண்டுபோய் விற்பதும், மற்ற நாட்களில் தோட்டத்தில் வேலை செய்வதுமாய் வாழ்க்கையை நடத்தினன். மாதந்தோறும் மொனுக்கோ நாடு சென்று பென்ஷன் தொகையைப் பெற்று வருவான். அவனது வாழ்க்கை அமைதியும் தூய்மையும் நிறைந்ததாய் அமைந்தது.

வேறு நாடாய் இருந்தால் என்னவாயிருக்கும்? அவனைத் தூக்கிலிட்டிருப்பா. அல்லது குடிகளின் பணம் வீணுவதைக் கவனியாது ஆயுள் பரியந்தம் சிறையிலிட்டிருப்பர். அததகைய நாட்டிலே அவன் பிறந்து வளர்ந்து இக்கொலைக் குற்றம் செய்யாமற் போனது அவனது நல்ல காலமென்றே சொல்ல வேண்டும்.(கலாநிலயம்.)

# இலங்கை இந்தியன்.

1928-ஹு டிசம்பர் மீ 12உ

## இந்தியர் வாக்குரிமைக்குப் புதியமறுப்பு.

—0—

இந்தியர்க்கு வாக்குரிமை கல்கக்கூடாதென்று அனேகர் பலகாரணங்கள் கூறித் தடுத்துவந்தது யாவருக்குந்தெரியும். டோனூமூர் கமிஷன் சீர்திருத்த யாதாஸ்த்தைப் பற்றி நமது சட்டசபையில் நடந்த ஓயா விவாதத்தில் இந்தியத்தொழிலாளர்க்கு விரோதமான கூற்றுக்கள் பல கோடைமழை போல் பொழியப்பட்டன. விவாத முடிவுடன் இந்தியர்க்கு விரோதமாயுள்ளகட்சியார் தங்களால் சிருஷ்டிக்கக்கூடியபோலிக் காரணங்களையெல்லாம் பொழிந்து விட்டனரென்றும், அவர்கள்மனம்போல் காரியம் சித்தியானபின் இந்தியர்மீது பிரயோகிக்கக்கூடியபாணம் அற்றுப் போயிருக்குமென்றும் நாம் நம்பி வந்தோம். நமது நம்பிக்கை இது போழ்து சிதறிவிட்டது. புத்தப் புதிய பாணமொன்று, வெளிநாடுறைந்து தற்போது இலங்கைக்கு மீண்டுவந்துள்ள திரு ஆர். எல். பெரைராவின் தூணியிலிருந்து எய்யப்பட்டிருக்கிறது. திரு. பெரைரா 'சிலோன் இண்டிபெண்டென்ட்' பத்திரிகை நிருபர் ஒருவருக்குப் பேட்டியளித்துப் பேசுகையில் இந்தியத் தொழிலாளர்க்கு வாக்குரிமை அளிக்கக்கூடாதென்பதற்கு மிக நவீனமானதொரு காரணம் கூறியுள்ளார். அவர்கூற்று வருமாறு:...

"இந்தியக்கூலிகளுக்கு வேற்றுமையின்றி யாவர்க்கும் வாக்குரிமை வழங்கப்படுமாயின் பின் வருஷங்களில் அதனால்மிகுந்த அபாயம் விளைந்துவிடும். இந்தியர் 'ஓட்டை வைத்துக் கொண்டுகாலேந்து ஐரோப்பியர் அடுத்த தேர்தலில் சட்டசபைக்குவந்து விடுவார்களென்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. அதற்குப்பின் தென்னிந்தியாவிலிருந்து ஏராளமான ஏழைப்பார்ப்பனர்கள் இங்குவந்து சபையிலுள்ள ஸ்தானங்களுக்குத் தகுதிபெற்றுவிடுவர்."

இக்கூற்றை நாம்சரிவர உணர்ந்துகொள்ளமுடியவில்லை. விளையக்கூடிய 'அபாயம்' என்னவென்பதும், பணமற்ற பிராமணர் இழைத்து விடப் போகும் தீமை யாதென்பதும் நமக்கு விளக்கப்படவில்லை. இதேமாதிரி அபிப்பிராயத்தைத் திரு பெரைரா மேற்சொன்ன பத்திரிகையின் லண்டன் நிருபரிடமும் கூறியிருக்கிறார். சுதந்திரக் காற்றை ஸ்வாசித்துக்கொண்டு சுதந்திர நாடுகளில் பிரயாணம் செய்துவந்த நண்பர் இத்தகைய குறுகிய மனப்பான்மையுடன்வேற்றுமைப்படுத்திக் கூறியிருப்பாரோ வென்று நாம் ஐயுறுவதற்கில்லை. ஒன்றிற்கு இரண்டு முறையாக அவர் அபிப்பிராயம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஒருகாலத்தில் திரு. பெரைரா இலங்கைக்கு வெளியே நன்மையெதுவும் இருக்காதென்று நம்பிவந்தார். ஆனால் பின்னர் வெளிநாடுகளுக்குச் சென்று யாத்திரை செய்ததில் மிகுந்தமாற்றமடைந்தார். அவர் உலகமனைத்தும் பார்த்திருப்பினும் தென்னிந்தியாவிற்குச் செல்லவில்லை. அடுத்த விடுமுறையை அங்குசென்று கழிப்பரேல் இன்னும் மாற்றமடைவர் என்று நம்புகிறோம். தென்னிந்தியாவில் பிராம்மணர்களைப் பாமரர்'தெய்வம்' என்றுகருதிவந்த காலம் மலையேறிவிட்டதென்றும், ஜனங்கள் மேன்மையெனக் கருதுவது பிராமண ஒழுக்கத்தையேயன்றி பார்ப்பன உருக்கொண்டவர்களையன்று. சாதி ஏற்றத்தாழ்வுகளும் கொடுமைகளும் ஒழிந்து மடிவதை நாம் அங்கு ஒவ்வொருநாளும் பார்க்கிறோம். இந்தப்பார்ப்பனரைத் திரு. பெரைரா எதற்காக இத்துணை தூஷிக்கவேண்டும்? அவர்கள் பிராமணர்களாய்ப்பிறந்தபாவத்திற்கா? அன்றி அவர்கள் ஏழ்மைப்பட்டிருப்பதற்கா? பிராம்மண குலத்தில் பிறந்தது அவர்கள் குற்றமில்லை. ஏழ்மையில் இடப்பதும் அவர்கள் பிழையன்று. பின் இவ்வளவுகோபம் எதற்கு? யாவரும் பிறக்கும்பொழுது செல்வத்தைக்கொண்டு வந்ததில்லையென்பதை நண்பருக்கு நினைப்பூட்டவேண்டிய அவசியமில்லை. செல்வம் முன்னோர்களால் சேர்த்துவைக்கப்பட்டோ, அன்றிஒருவன் தாழ்நாளில் சம்பாதிக்கப்பட்டோ பெருகவேண்டும். ஆகலின் ஏழ்மையும் பிராம்மணர் குற்றமன்று. இத்துடன் மேல்நாடுறைந்து திரும்பிய நண்பர் ஆங்கே ஏழைகள் வலிமை பெருகி அவர்வதை மறந்து விடாமலிருக்க வேண்டுகிறோம். இனி வரப்போகும் உலகராஜ்யங்கள் ஏழைகள் ராஜ்யங்களாகவே இருக்கப்போகின்றன.

பொறுப்புவாய்ந்த தலைவர்கள் இம்மாதிரியான வேற்றுமைப் புத்தியை இலங்கையில் கொணர்ந்து புகுத்துவது அழகல்ல. திரு. பெரைரா சிறிது காலத்திற்கு முன்னரெல்லாம் வகித்துவந்த சிறந்த மனப்பான்மையுடனும் தாராள சிந்தையுடனும் இந்தியர் விஷயத்தையும் ஆராய்தல் வேண்டுமென்பதே நமது நோக்கம்.

## வர்த்தமானங்கள்.

கல்கத்தா போலீசார் 'பார்வர்டு' பத்திரிகாலயத்திற்குள்புகுந்து, அப்பத்திரிகையின் ஆசிரியரான திரு. ஸத்யரஞ்சன் பக்ஷி என்பவரையும், அச்சிடுபவரான திரு. புலின்பிகாரிதார் என்பவரையும் 124எபிரிவின்படி குற்றஞ்சாட்டி கைதுசெய்திருக்கின்றனர். டிசம்பர் 1-உ 'தெரிவிக்கப்படாதவர்' என்ற தலைப்புடன் அப்பத்திரிகையில் ஒருகட்டுரை வெளிவந்தகாரணமாகவே பிரஸ்தாபகுற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. போலீஸார் அக்கட்டுரை வெளிவந்த சிலபத்திரிகைகளையும் எடுத்துக்கொண்டனர். ஆசிரியரும் அச்சிடுவோரும் ஜாமீனில் விடப்பட்டிருக்கின்றனர்.

0 0 0

பம்பாய் ராஜதானியில் நம்டெக்தாலுகாவில் பூமிக்குள் புதைபட்டிருந்த ஒரு நகரம்கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க ஆராய்ச்சிக்காரர் பூமியைத்தோண்டிப்பார்த்ததில் ஏராளமான தூக்குவிளக்குகளும், நைவிலங்குகளும், செங்கல்களும் அகப்பட்டிருக்கின்றன. கர்ணபரம்பரையாக அங்கு நன்பூர் என்று ஒருஊர் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இன்னும் அதிகமாய்த்தோண்டிப்பார்த்தால் பலபுதிய ஆச்சர்யமானவிஷயங்கள்தெரிபவரும்.

0 0 0

### கல்கத்தா காங்கிரஸ்

43-வது இந்திய தேசிய காங்கிரஸ் இம்மாதம் 29, 30, 31-உகளில் கல்கத்தாவில் அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் தேசபந்து நகரில் கூடுகிறது. விஷயாலோசனைக்கமிட்டி 25-உகூடும். காங்கிரஸ்நன்காட்சி 16-உ ஆரம்பமாகும். காங்கிரஸ்விஷயமான எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. 20,000 பேர் அமரக்கூடிய அழகியபந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது. யாவருக்கும் பிரசங்கங்கள் கேட்கும்படி 'உரக்கக்கூறும்' எந்திரங்கள்வைக்கப்படும். பந்தலுக்குவெளியே பிரதிநிதிகளும், விசிடர்களும், ஸ்திரீகளும் இளைப்பாறுவதற்கான சோலைகளும் அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. விசிடர் டிக்கட்டுகள் ரூ. 10, 15, 20, 100 க்கும் மேற்பட்ட தொகைக்கும் கிடைக்கும், நாளொன்றுக்கு 5 ரூபா கட்டணம் செலுத்துபவர்கள் விஷயாலோசனைக் கமிட்டி நடவடிக்கைகளைப் பார்க்க விடப்படுவார்கள்.

0 0 0

காங்கிரஸ் அக்ராசனரான பண்டிதமோதிலால் நேருவுக்கும், அவர்மைந்தர் ஜாவர்லால் நேருவுக்கும் அவர்கள் கல்கத்தாவுக்கு விஜயஞ் செய்யும்பொழுது வரவேற்புப்பத்திரம் அளிக்கவேண்டுமென்று ஹௌராமுனிசிபல் சபையார் தீர்மானித்திருக்கின்றனர்.

0 0 0

வங்காளத்தில் மோரெல்கஞ்ச் என்னுமூரிலுள்ள பெரிய கச்சேரியில் சென்ற 6-ம் உபகலில் மோகன்கான் என்பவனும் அவன் மகமதிய சகாக்களான 1000 பேரும் புகுந்து கொள்ளையிட்டனர். கதவுகளும் சாளரங்களும் உடைக்கப்பட்டன. இது விஷயமாய் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கண்டி இந்திய வாலிபர் சங்கத்தினர், தென்னாட்டுத் திலகரும் சுயராஜ்ய வீரருமாகிய டாக்டர் பி.வரதராஜுலு நாயுடவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யும்பொழுது அன்னார்க்கு கண்டி இந்தியரின் சார்பாக டி சங்கத்தின் ஆதரவில் ஊர்வலத்துடன் பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச்சென்று வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொப்பதெனத்தீர்மானித்திருப்பதாக டி சங்கக் காரியதரிசி அறிவிக்கிறார்.

0 0 0

கொச்சி ராஜ்யத்தில் திருப்பனித்துறைக்குச் சமீபத்திலுள்ள இரும்பனம் என்னுமூரில்இரண்டுகுழந்தைகள் விறகு சேகரிக்கச் சென்றபொழுது ஒருமரத்திலிருந்த சில முட்டைகளை எடுத்து உடைத்துவிட்டனர். முட்டைகள் பட்சிகளினுடையவை என்று அவர்கள் நினைத்தனர். ஆனால் அவைகள் பாம்பின் முட்டைகள். தாய்ப்பாம்பு வந்து முட்டைகளைக் காணாமல் அவைகள் உடைந்துகிடந்த வழியை அறிந்துதேடிச்சென்று அக்குழந்தைகளிருந்த வீட்டிற்குள் புகுந்து ஒரு குழந்தையைக் கடித்துக்கொன்றது. பிழைத்திருந்த குழந்தை முட்டைகளை உடைத்ததைப்பற்றிச் சொல்லக்கேட்டு வீட்டார் இரவுமுழுதும் பயந்து விழித்திருந்தனர். பாம்பு இரவிலும் வந்ததாம். வீட்டார் வேறு வீட்டிற்குச் சென்றனர். அங்கும் அந்நாகம் போனதில் அடிக்கப்பட்டு மாண்டது. பாம்பு பழிக்குப் பழி வாங்கிய இச்செய்தி மிகவும் அதிசயமாயிருக்கிறது.

0 0 0

திருவாங்கூர்ராஜ்யத்தில் இன்னும் காலரா நின்றபாடில்லை. கழிந்த வாரத்திற்கு முந்திய வாரத்தில் 573 மரணங்கள் அதனால் சம்பவித்திருக்கின்றன. சென்ற 3-மாத காலத்தில் 3381 மரணங்கள் நேர்ந்திருக்கின்றன. நோயைத் தடுப்பதற்கு வைத்தியர்களும், ஊழியர்களும் நியமிக்கப்பட்டிருப்பதோடு, அவர்கள்விரைவில் செல்லுவதற்காக மோட்டார்வண்டிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

0 0 0

அலகாபாத்முனிசிபல் சபைக்கு பண்டிதஜாவர்லால் நேரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படலாமென்று சொல்லப்படுகிறது. பண்டிதர் முன்னமேயே ஓராண்டு அவ்வேலையைப்பார்த்துப் புகழடைந்திருப்பதால் மீண்டும் அவர்காலத்தில் அலகாபத்திற்கு மிகுந்த நன்மை ஏற்படக்கூடும்.

0 0 0

கோயமுத்தூரிலிருந்து மூனாருக்குப் போகும்பாதையில் மோரிஸ், வில்லியம்ஸன் என்ற இரண்டு ஐரோப்பியத் தோட்டக்காரர் மோட்டார் கவிழ்ந்ததால் காயம் பட்டு மாண்டுபோயினர். இருவரும் மோட்டாரில் செல்லும்பொழுது எதிரில் ஆடுகள் வந்ததால் திடீரென 'பிரேக்' போட்டுநிறுத்தப்பட்டதால் கார் கவிழ்ந்து போயிற்றாம்.

0 0 0

போபால் ராஜ்யத்தில் பெரிய புயல் காற்றினாலும் மழையினாலும் பயிர்களுக்கும் மற்ற சொத்துக்களுக்கும் மிகுந்தசேதம் ஏற்பட்டிருக்கிறது. போபால் மன்னர்வெளியூரிலிருந்து மழையிலேயே ஊருக்குவந்து சேதமான பயிர்களைப் பார்வையிட்டார். விரைவில் அவர்தன் சமஸ்தான முழுவதையும் சுற்றிப்பார்க்க உத்தேசித்திருக்கிறாராம்.

0 0 0

கோலாரிலுள்ள பிராமணர்களின் பிரதிநிதிகள் தாங்கள் தேர்தலுக்குநின்று முனிசிபல்சபைமுதலியவற்றில்ஸ்தானம்பெறுவதால் மற்றசாதியார்களுக்கு மனக்கசப்பையுண்டாக்கி ஒற்றுமைக்குப் பங்கம் விளைவதால் பிராமணர் அத்தகைய ஸ்தானங்களுக்கு இனி நிற்கப் போவதில்லையென்று தெரிவித்திருக்கின்றனர். இம்முடிவு கோபத்தாலும், வெறுப்பாலும் ஏற்படவில்லையென்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

0 0 0

இந்தியாவின் எல்லைப் புறத்திலுள்ள ஜலாலாபாத் என்னுமிடத்தில் ஷின்வாரி வகுப்பைச்சேர்ந்த ஆப்கானியர் சிறிதுகாலத்திற்கு முன்பெரியகலகம் செய்தனர். இப்பொழுது இம்மாதம் 3-ம் தேதியன்று அசற்குப்பின்னும் அவர்கள் மறுபடியும் கலகம் செய்து வருகிறதாய்த் தெரிகிறது. ஆப்கன் அமீர் தனது பிரஜைகளின் குருதிஅய வீணாகச் சிந்தமனமில்லாமல் இக்குழப்பத்தைச் சமாதானப்படுத்த வேண்டிய ஏற்பாடு செய்தார். எனினும் கலகத்தில் ஷின்வாரி கலகக்காரர்களில் காயப்பட்டவர்களும் மாண்டவர்களுமாக 8000 பேர்கள் கலகம் அடக்கப்பட்டதில் துன்பப்பட நேரிட்டிருக்கிறது. பம்பாயிலுள்ள புதிய ஆப்கன் பிரதி இம்மாதிரி நடப்பது சகஜந்தானென்றும் இதைப்பற்றி அதிகக்கவலைக்கிடமில்லையென்றும் கூறியிருக்கிறார்.

—————

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தவிச்சம்பளமும் கிடைப்பதற்குவிண்ணப்பித்துக் கொள்வதைப் பற்றி டோனூமூர் கமிஷன் குறிப்பிட்டிருக்கும் 3-வது காரணத்தை (அதாவது இலங்கை அரசாங்கத்தின் கீழ்வேலை பார்த்துவரும் உத்தியோகஸ்தரின் காலமுழுவதிலும் எப்பொழுது வேண்டுமாயினும் விலகிக்கொள்ளச் சந்தர்ப்பமளிப்பதை )இச்சபை நிராகரிப்பதுடன், அத்தகைய சந்தர்ப்பம் புதிய சட்டசபை அமைக்கப்பட்டபின் குறிப்பிட்டமூன்று வருஷ காலத்திற்குள்ளாகத்தான் அளிக்கப்படவேண்டுமென்றும் இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

(5) இலங்கையருக்கும் சம்பளத்திற்குத்தகுந்தாற்போலஉதவிச் சம்பளமும் வேலையின்மையின்நஷ்டஈடும் பெற்றுக்கொண்டு உத்தியோகத்திலிருந்து விலகும் சுதந்திரம் அளிக்கப்படுவதை இச்சபை நிராகரிக்கிறது ஆதரித்தவர் 12, எதிர்த்தவர் 4. நடுநிலை 10.

சம்பள நிர்ணய கமிஷன் இப்பொழுது ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லையென்றும் பின்னர் அவசியப்பட்டால் சட்டசபையே ஒத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஏற்படுத்திய கமிஷன் செய்யும் சிபார்சுகள் சபையின் ஆமோதிப்பைப் பெறவேண்டுமெனவும் இச்சபை தீர்மானிக்கிறது. ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது.

### தேர்தல் தொகுதிகள்.

தேர்தல் தொகுதிகளைத் திருத்தியமைக்கப் போவதில், 50,000 எண்ணமுடைய ஜனத்தொகைக்குக் குறைந்திருப்பினும் ஒவ்வொரு ரெவினியூ ஜில்லாவும் நூர் அங்கத்தினரைத் தெரிந்தெடுக்க வேண்டிய தொகுதியாய் அமையவேண்டும். அதுபோலவே, பொருளாதாரத்திலோ சமூகவிஷயத்திலோ ஒன்றியிருந்தால் ஒருபிரதேசத்தின் நன்மைக்காக அதை ஒருதேர்தல் தொகுதியாக ஏற்படுத்தலாம்.

ஆதரித்தவர் 16, எதிர்த்தவர் 9, நடுநிலை 5.

ஓட்டர்களை ரிஜிஸ்டர் செய்யும் வேலையை அரசாங்கத்தாரேசெய்துவர வேண்டுமென்றும், கமிஷனர் விண்ணப்பித்துக் கொள்பவரையே ஓட்டராகப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பதன்படி நிபந்தனை செய்யக்கூடாதென்றும் இச்சபை வற்புறுத்துகிறது.

ஆதரித்தவர் 21 எதிர்த்தவர் 5. நடுநிலை 10.

### பிரதம காரியதரிசி.

பிரதம காரியதரிசி உத்தியோகத்திற்கு இங்குள்ள சிவில் சேர்விஸ்காரர்பட்டும் அருகரென்றிருக்கக்கூடாதென்று இச்சபை அபிப்பிராயம் கூறுகிறது.

ஆதரித்தவர் 11, எதிர்த்தவர் 10 நடுநிலை 14.

### 'கௌரவ' பட்டம்.

1875 லிருந்து சட்டசபை அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் 'கௌரவ' பட்டம் இனி வழங்கப்படவேண்டிய அவசியமில்லையென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

ஆதரித்தவர் 14. எதிர்த்தவர் 10, நடுநிலை 13.

மத்திய சட்டசபை, முனிசிபல்சபைகள், மற்றும் ஸ்தலஸ்தாபனங்கள்முதலியவற்றிற்கு தேர்தலுக்கு நிற்கவும், வாக்குரிமை வழங்கவும் ஆடவருக்குரிய தகுதிகளே மாதருக்கும் இருக்கவேண்டும் ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது.


தற்போது இலங்கைச் சட்டசபை பொருளாதார விஷயங்களிலும் மற்றவற்றிலும் அனுபவித்துவரும் அதிகாரங்களும், உரிமைகளும் எவ்விதத்திலும் குறைக்கப்படவோ நீக்கப்படவோ கூடாதென்று இச்சபை தீர்மானிக்கிறது.

ஆதரித்தவர் 22, எதிர்த்தவர் 2, நடுநிலை [illegible]

—— ——

Ford

## புதிய டூரிங் கார்



## உங்களுடையது

ரொக்கம் ரூபாய் 2450

அல்லது

முதலில் காரைப் பெற்றுக்கொள்ளும்பொழுது (இன்ஷூரன்ஸ தொகை தவிர) ரூபாய் 800-ம் செலுத்தி மீதி தொகையை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 164 வீதம் 11 மாதமாகவும் செலுத்த வேண்டும்.

உங்கள் பக்கத்திலுள்ள போர்ட் வியாபாரிக்காவது ஸிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்களுக்காவது எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளவும்.

**பியேர்ஸ், லெஸ்லி அண்ட் கொம்பனி,**
பெயர்பீல்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ்
**கொழும்பு.**

## கோல்கேட் ஆக்ட்டகன் சோப்

மிகவும் உபயோகமானது.

## உலகப் பிரசித்திபெற்ற ஆக்ட்டகன் சோப்




வஸ்திரங்கள் சுத்திசெய்வதற்கும் மற்றும் வீட்டில் எப்பொழுதும் உபயோகிப்பதற்கும் மிகவும் அருமையானது.

**ஆக்ட்டகன் சோப்**

எந்த ஜலத்திலும் உபயோகிக்க கூடியது. மிக மெல்லிய வஸ்திரங்களுக்கும் யாதொரு கெடுதியும்செய்யாதுஎந்த அழுக்கையும் மிக சுலபமாகப் போக்கக்கூடியது.

**மூன்று சிகப்புப்பட்டைகளுள்ள காகிதத்தில் சுத்தியிருக்கும் ஆக்ட்டகன்சோப்பைக்கவனித்துவாங்குங்கள்.**

அக்காகிதங்களை கவனமாய் சேர்த்து வையுங்கள். அவைக்குப் பதிலாக தக்க பரிசுகள் கிடைக்கும்.

**ஆக்ட்டகன்கூப்பன்களை சேர்த்து வையுங்கள்.**

விலையுயர்ந்த பரிசுவிபரங்கள் அடங்கிய நேர்த்தியான கேட்லாக் கேட்போருக்கு இனமாக அனுப்பப்படும்

சோல் ஏஜண்டுகள்:

**A. V. R. A. Adycappa Chetty,**
15, Sea Street, COLOMBO.

**A. M. Othuman Pillai,**
24, Keyser Street, COLOMBO

☞ “ஹேகோமால்டை எங்களுக்குக்கொடுங்கள்” என குழந்தைகள் கத்துகின்றனவே!




டாக்டர்

“மூலரின்

ஹேகோமால்ட்”

எல்லோருக்கும் தேகக்கட்டை அளித்து வரக்கூடியதா யிருக்கிறது.

விடாமின்,

பாஸ்பரஸ், இரும்பு, கால்ஷியம் முதலிய புஷ்டி தரத்தக்க பதார்த்தங்கள் இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. பலனற்ற குழந்தைகளுக்கும், பிரசவமான ஸ்திரீகளுக்கும், பிரசவமாகாமல் கர்ப்பிணியா யிருப்பவர்களுக்கும் மிகவும் வீரியங் கொண்டதும் நிகரற்றதுமான திவ்ய டானிக் இது ஒன்றே. இதை டாக்டர்கள் மிகவும் சிறந்த தென சிபார்சு செய்கிறார்கள்.

ஓர் முறை ஹேகோமால்டை வாங்கி பரீக்ஷியுங்கள். அதன் நிகரற்ற குணங்கள் அப்போதுதான் தெரியவரும்.

குறிப்பு:—

ஒவ்வொரு நாளும் ஆகாரம் எடுத்துக்கொள்வதற்கு முன்னர் 3 வேளை, ஒன்று அல்லது இரண்டு சிறு கரண்டிகள் சாப்பிடவும். பால், தேத்தண்ணீர், காப்பி, கோகோ முதலியவைகளுடன் கலந்தும் இதனை உட்கொள்ளலாம். மிகவும் ருசியைத் தரத்தக்கது.

**எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.**


# இந்தியர்களே! சற்றுகவனியுங்கள்!

———oo———

**‘இலங்கை இந்தியன் பத்திரிகைக்கு நீங்கள் ஏன் சந்தாதாரராக சேர வேண்டும்’ என்பதற்கு காரணங்கள் ஆறுஉள. அவை:—**

1. இலங்கையில் இந்தியர்களுக்காக ஊக்கத்துடன் உழைக்கும் தமிழ்ப்பத்திரிகை இது ஒன்றே.

2. இப்பத்திரிகை நடத்துவதில் உடமஸ்தருக்கு ஏற்படும் தியாகத்தையும் பணகஷ்டத்தையும் பொருள் படுத்தாது இந்தியரின் நலத்தையே முக்கிய நோக்கமாக கருதிஇப்பத்திரிகை பாடுபட்டு வருகிறது.

3. இப்பத்திரிகையின் அபிப்பிராயங்கள் இந்தியா கவர்மெண்டாலும் இலங்கை கவர்மெண்டாலும் நன்குமதிக்கப்படுகின்றன.

4. இப்பத்திரிகையானது இத்தீவிலுள்ள இந்தியரின் மனோபாவத்தையும் அவரது அபிப்பிராயங்களையும்உள்ளவாறே விளக்கி காட்டுகின்றது.

5. பத்திரிகை பிரசுரிப்பதி லேற்படும் செலவுக்குமட்டும் போதுமானபடி பத்திரிகையின் சந்தா மிககுறைவாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் சிறிதும் தாமதமின்றி, இத்துடன் சேர்த்திருக்கும் பாரத்தை பூர்த்திசெய்து எங்களுக்கு உடனே அனுப்புங்கள்!

6 இப்பத்திரிகையை ஓர் பிழைக்கும் வழியாகக் கருதி இதன் சொந்தக்காரர் நடத்திவரவில்லை. அவர் தன் செலவுகளை நிர்வகிக்கும் பொருட்டு இதனை நடத்தவுமில்லை. தனக்கேற் பட்டுள்ள சொந்தத் தொழிலில் அரும்பாடுபட்டுச் சேர்க்கும் பொருளையே அதன் மூலதனமாக வைத்து அதனை நடத்திவருகிறார். தனது தொழிலி லீடுபட்டு சுலபமாக பணத்தைத் தேடுவதற்குரிய நேரத்தையும் அதற்காகவே தியாகம் செய்துவருகிறார்.

சந்தாதாரராக சேருவோர் தயவுசெய்து கீழ்க்கண்ட துண்டைப் பூர்த்திசெய்து அனுப்புங்கள்.
“இலங்கை இந்தியன்” மனேஜரவர்களுக்கு,
107,B, ஹல்ஸ்டாரப் தெரு, கொழும்பு.

சந்தா விபரம்-

——o——

| | | |
|---|---|---|
| இந்தியா இலங்கை முதலிய விடங்களுக்கு | வருட சந்தா | ரூ. 5-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-00. |
| வெளி நாடுகளுக்கு | வருட சந்தா | ரூ. 6-00. |
| | 6 மாதச் சந்தா | ,, 3-50. |

ஐயா,

அடியிற் கையொப்பமிட்ட என்னைத் தங்களுடைய “இலங்கை இந்தியன்” தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஒரு வருட / 6 மாத சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

ஒப்பம்.............................................

பெயர்.............................................

விலாசம்.............................................

.............................................

குறிப்பு:- தயவுசெய்து பெயரையும், விலாசத்தையும், தெளிவாக எழுதியனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

Printed and published for the Proprietor by H. Nelliah B. A. [residing at 97 Mlaiban St. Colombo] at the "Ceylon Indian" Printing Works. 107B. Hulftsdorp Street, Colombo.